***(வலைப்பின்னல் மாற்றுமுறை)***

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மர்கஸ் இஸ்லாமிய நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(1999 யூலை மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, யூலை மாதம் 09 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II **ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 3.50**

[*1999 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.– ஓ 22/98*

**மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தைக் கூட்டிணைப்பதற் கானதொரு சட்டம்**

"மர்கஸ் இஸ்லாமிய நிலையம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் தாபிக்கப்பட் டுள்ளதாதலாலும் ; *முன்னுரை.*

செல்லப்பட்ட சங்கமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும் விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, மர்கஸ் இஸ்லாமிய நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "நிலையம்"எனக் குறிப்பீடு செய்யப் படும்) மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தின் உறுப்பினர்களாக உள்ள அத்தகைய ஆட்களும், இத்தால் உருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதனகத்துப் பின்னர்"கூட்டுத்தாபனம்"எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மர்கஸ் இஸ்லாமிய நிலையம்" என்ற பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருக்கவேண்டுமென்பதோடு, அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன் விருப்பப்படி அதனை மாற்றி யமைக்கவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டி ருத்தலும் வேண்டும்.

H-022545

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இஸ்லாம் கடைப்பிடிக்கப்படுவதை ஊக்குவித்தல் ;

(ஆ) அரபு மொழியினதும், இலக்கியத்தினதும் இஸ்லாமிய மார்க்கத்தினதும் அதன் வரலாற்றினதும் கலாசாரத்தினதும் கல்வியையும் அவற்றைப்பற்றிய ஆய்வையும் அவற்றின் எல்லா அம்சங்களிலும் மேம்படுத்தலும் ஆதரித்தலும் ஊக்குவித்தலும் ;

(இ) தமிழ், சிங்களம், அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இஸ்லாம் பற்றிய ஆய்வுக்கு ஊக்கமளித்தல் ;

(ஈ) இஸ்லாமிய கலாசாரத்தையும் ஒழுக்கநெறியையும் ஊக்குவித்தல் ;

(உ) இஸ்லாம் பற்றியதும் இஸ்லாமிய வாழ்க்கைமுறை பற்றியதுமான கல்விக்கு வசதியளித்தல் ;

(ஊ) இலங்கையினுள்ளும் அதற்கு வெளியேயும் ஒத்த குறிக்கோள்களையுடைய இஸ்லாமிய நிறுவனங்களுடன் நட்புறவான தொடர்புகளைத் தாபித்தலும் பேணுதலும்;

(எ) இஸ்லாம் பற்றிய நூல்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் துண்டுப்பிரசுரங்களையும் அச்சிடுதலும் வெளியிடுதலும் விநியோகித்தலும் ;

(ஏ) சிங்களமொழி மூலமாகக் கற்கின்ற முஸ்லிம் மாணவர்களுக்கு சிங்களத்தில் இஸ்லாம் பற்றிய கல்விச் சாதனங்களை வழங்குதல் ;

(ஐ) மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தை நிர்வகித்தலும் பேணுதலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஒ) மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தின் கட்டிடங்களைப் பேணுதலும் இஸ்லாம் பற்றிய வகுப்புக்களையும் கருத்தரங்குகளையும் மார்க்கவுரைகளையும் நடாத்தும் நோக்கத்துக்கு அவசியமாயின் புதிய கட்டிடங்களை நிருமாணித்தலும் ;

(ஓ) மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தின் நூலகத்தையும் விரிவுரை மண்டபங்களையும் பேணுதலும் இஸ்லாம் பற்றிய கல்வியை ஊக்குவிப்பதற்கான புதிய விரிவுரை மண்டபங்களையும் நூலகங்களையும் பேணுதலும் ;

(ஔ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கான நிதிகளைப் பெற்றுக் கொள்ளுதல் ;

(க) கல்வி, கலாச்சார நடவடிக்கைகளை ஊக்குவித்தல் ;

(ங) சமூக, பொருளாதார நலன்புரி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமான வாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவு மான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக்கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும். :—

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனங்களை வைத்திருக்கலாம்.

**5**. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவற்ற, அசைவுள்ள ஏதேனும்

ஆதனத்தைக் கையேற்கவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களையும் விற்க, குத்தகைக்குக் கொடுக்க, வாடகைக்குக் கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, முகாமைக் குழுவொன்றின்மூலம் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) இக்கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்ததும் இச்சட்டத்தின் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுமான மர்கஸ் இஸ்லாமிய நிலையத்தின் முகாமைக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*நிலையத்தினால் செலுத்தப்படற்பாலனவையும் நிலையத்துக்குச் செலுத்தப்படற்பாலனவையுமான கடன்கள்.*

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று இருக்கின்றதான நிலையத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும், இத்தால் உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்நாளன்று நிலையத்துக்கு வருமதியான எல்லாக் கடன்களும், நிலையத்துக்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும் .

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**8**. (1) கூட்டுத்தாபனமானது பின்வருவன தொடர்பில் தகுந்த கணக்குப்புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட அல்லது செலவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் ஐந்தொகையும் ஆகக் குறைந்தது ஆண்டிற்கு ஒரு தடவையாவது தகைமைபெற்ற கணக்காய்வாளரால் அல்லது கூட்டுத்தாபனத்தால் அந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் ஐந்தொகையும் நியாயமான எல்லாநேரங்களிலும் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் பரிசீலனை செய்யப்படுவதற்கிருத்தல் வேண்டும்.

*கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருகத்கதின்ற ஆதனம்.*

**9**. எவ்விதத்திலாயினும் பெறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனங்களும் இதன்கண் எடுத்துக்கூறப்பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டுமென்பதுடன் அதன் எப்பாகமும், கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்குப் பங்கிலாபம் கடன், மிகையூதியம் என்ற வகையாக எவ்விதத்திலேனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது :—

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றைத் தடைசெய்தலாகாது :—

(அ) கூட்டுத்தாபனத்துக்கு அவரால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காகக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு, நியாயமானதும் தகுந்ததுமான ஊதியத்தைக் கொடுப்பனவு செய்தல் ;

(ஆ) தமது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுவதில் அல்லது புரிவதில் அல்லது கூடடுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் கூட்டுத்தாபன உறுப்பினர், அலுவலர் அல்லது ஊழியர் எவரினாலும் முகாமைக்குழுவின் அங்கீகாரத்தோடு உறப்பட்ட நியாயமானதும் தகுந்ததுமான செலவுகளைத் திருப்பிக் கொடுத்தல் அல்லது மீளக் கொடுப்பனவு செய்தல்.

*ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் நிதிகளை முதலீடு செய்தல் கடன்கள் திரட்டுதல் முதலியவற்றுக்கும் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**10**. பின்வருவனவற்றைச் செய்தல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் கூட்டுத்தாபனத்திற்குத் தேவைப்படக் கூடியனவும் அதே நோக்கத்துக்காகச் சட்டமுறையாகக் கொள்ளக்கூடியனவுமான காணிகளை அல்லது கட்டடங்களைக் கொள்வனவு செய்தலும் கொள்ளுதலும்

வாடகைக்கெடுத்தலும் நிர்மாணித்தலும் அல்லது வேறு வகையாகப் பெறுதலும், உசிதமானதென அது கருதக் கூடியவாறாக அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளைத் தகுதியென முகாமைக்குழு எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையில்முதலீடு செய்தலும், அத்தகைய எவையேனும் முதலீடுகளைக் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தலும் கைமாற்றுதலும் ;

(இ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையில் அதன் ஏதேனும் கடனுக்கு அல்லது கடப்பாட்டுக்குப் பிணைப்பொறுப்பளித்து அதனைப் பொறுப்பு விடுவித்தலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக, உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் எல்லா வகையினவுமான ஒப்பப்பணங்களையும் மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் அத்துடன் கொடைகளையும் பெறுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப் படுகின்ற எவையேனும் கட்டடங்களை நிர்மாணித்தலும் மாற்றியமைத்தலும் அல்லது பேணுதலும் ;

(ஊ) முகாமைக்குழுவால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப் படக்கூடியவாறாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர் களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், பதவி நீக்குதலும் அல்லது அவர்களின் சேவையை முடிவு றுத்துதலும் அத்துடன் அவர்களுக்கு அத்தகைய சம்பளங்கள், ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், படிகள் என்பவற்றைச் செலுத்துதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் கடந்தகால அல்லது தற்போதைய அலுவலர்களுக்கு அல்லது சேவையாளர்களுக்கு அல்லது அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர் களினதும் உறவினருக்கு அல்லது தங்கிவாழுநருக்குப் பணிக்கொடைகள், ஓய்வூதியங்கள், படிகள் அல்லது

ஏனைய நன்மைகளை வழங்குவதற்கான ஏதேனும் நிதியத்தை அல்லது திட்டத்தைத் தாபித்தலும் அல்லது அந்த நிதியத்துக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துதலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்காக, கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனும் ஆளுடன், ஏதேனும் கம்பனியுடன், சங்கத்துடன் அல்லது ஆட்கள் குழுவு டன் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுதல் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக மானியக் கொடைகளையும் அறக்கொடைகளையும் புலமைப் பரிசில்களையும் வழங்குதல் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்த முறையிலும் பயனுள்ளனவாகவும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறாக, வேறெல்லாக் காரியங்களையும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செய்தல் ;

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது முகாமைக் குழுவின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமுகாயிருந்ததற்கு அத்தாட்சியாக அச்சாதனத்தில் அவர் களது பெயர்களை எழுதிக் கைகையொப்பமிடுதல் வேண்டும். அப்படிக்கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12.** அச்சட்டத்தில் அடங்கியிருப்பது எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர் களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளை யேனும் பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணல்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***13.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**முகாமைக் குழு** *(6 ஆம் பிரிவு]*

1. ஜனாப் அப்துல் ரஹீம் மரிக்கார் முகமத் நஜிப்தீன்
2. ஜனாப் முகமத் சலீம் முகமத் பாரூக்
3. ஜனாப் அப்துல் ரஹ்மான் லெப்பை மஹ்முத் லெப்பை
4. ஜனாப் அப்துல் ஜப்பார் முகமத் ஜாபிர்
5. ஜனாப் அப்துல் வதூத் முகமத் பாரூக்
6. ஜனாப் முகமத் ஹுசெய்ன் முகமத் ஃபுவாட்
7. ஜனாப் ஷாகுல் ஹமீத் செய்யது முகமது ஓமர்
8. ஜனாப் முகைதீன் முகமத் அன்ஸார்

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*